***Sri Lankan Journal of Arabic and Islamic Studies, 5(2) 2022***
*Published by Faculty of Islamic Studies and Arabic Language, ISSN: 2550:3014*
*Published: December 2022*

# பல்கலைக்கழக மாணவர்களிடத்தில் இஸ்லாமிய உளவளத்துணை பற்றிய தெளிவு: இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை மையப்படுத்திய ஆய்வு

## (THE CLARITY ABOUT ISLAMIC COUNSELLING AMONG THE UNDERGRADUATES: BASED ON SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA)

M.H.M. NAIROOS[1], M.S. ZUNOOMY[2]

[1] DEPARTMENT OF ISLAMIC STUDIES, [2] DEPARTMENT OF ARABIC LANGUAGE
[1&2] SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
nairoos@seu.ac.lk, zunoomy@seu.ac.lk

***Abstract:*** *Islam concerns in re-forming human activities. It guides to resolve the mental needs too. In accordance with that, it contains Islamic Counselling to manage day to day human activities. This concept is begun to discuss among Sri Lankan minority Muslims. Therefore, this research aims to identify the clarity of Islamic Counseling among undergraduates. It uses descriptive analysis methodology. The primary data were gathered through discussion and questionnaire among 150 undergraduates. As well as the secondary data were collected from research papers, books, articles, and website articles. This research finds that the undergraduates agree to get well knowledge about the Islamic Counselling since they are negligence and they omit to practice to meet Islamic Counsellor due to the social expectations.*

***Keywords:*** *Counselling, Islamic Counselling, Muslim Students, Psychological Problems*

**ஆய்வுச்சுருக்கம்**
*இஸ்லாமிய மார்க்கமானது மனிதனுடைய செயற்பாடுகளை சீர்செய்வதில் கரிசனை காட்டுகின்றது. இதன்காரணமாக மனித உளத்தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாக இஸ்லாமானது பல்வேறு வழிகாட்டல்களை வழங்குகின்றது. அவற்றினை உட்பொதிந்த ஒன்றாகவே இஸ்லாமிய உளவளத்துணை காணப்படுகின்றது. இன்றளவில் இலங்கைவாழ் முஸ்லிம்களிடத்தில் இது பற்றிய எண்ணக்கருக்கள் முன்மொழியப்பட ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இத்தோரணையில் பல்கலைக்கழக முஸ்லிம் ஆண் மாணவர்களிடத்தில் இவ்வெண்ணக்கரு பற்றிய தெளிவை மதிப்பிடும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாய்வானது தரம்சார், பண்புசார் முறையில் விபரிப்பு ஆய்வு முறையியலில் அமைந்துள்ளது. முதற்நிலைத் தரவுகள் கலந்துரையாடல் மற்றும் வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்டுள்ளன. வினாக்கொத்து 150 பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகள் ஆய்வுகள், நூல்கள், கட்டுரைகள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் எம்.எஸ். எக்ஸல் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இஸ்லாமிய உளவளத்துணை பற்றிய அறிவை, தெளிவை பெற வேண்டுமென்பதை ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்கள் ஏற்றுக்கொண்டாலும், அதற்கான முயற்சிகளை மேற்கொள்வதை விட்டும் கவனயீனமாக இருக்கின்றனர். மேலும் முஸ்லிம்கள் என்றவகையில் இஸ்லாமிய உளவளத்துணை பெறச்செல்வதை உளப்பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வாக கருதினாலும், சமூகக் கட்டமைப்பிற்கு இசைவாக்கமடைந்து அதனை விட்டும் ஒதுங்கி விடுகின்றனர். எனினும் இஸ்லாமிய உளவளத்துணை பெறச்செல்ல வேண்டுமென்ற எண்ணம் அவர்களின் ஆழ்மனதில் இருப்பதை அவர்களுடனான உரையாடல்கள் மூலம் அறியமுடிகின்றது என்பதை இவ்வாய்வின் முடிவாக எடுத்துக்கொள்ளலாம். இவ்வாய்வானது இஸ்லாமிய உளவளத்துணை பற்றிய விரிவானதொரு அறிமுகத்தை சமூகத்திற்கு வழங்குவதால் காலத்தின் தேவையை உணர்ந்து மேற்கொள்ளப்பட்டுள்ளதை நிரூபிக்கின்றது.*

**திறவுச்சொற்கள்:** *உளவளத்துணை, இஸ்லாமிய உளவளத்துணை, முஸ்லிம் மாணவர்கள், உளப்பிரச்சினை*

## அறிமுகம்

### உளவளத்துணை

மனிதனுக்கு ஏற்படக்கூடிய உளநெருக்கடிகளை முகங்கொடுப்பதற்கு அவன் தன்னை தயார்படுத்திக்கொள்வது அவசியமாகும். இவ்வாறு ஒரு மனிதன் தன்னை தயார்படுத்திக்கொள்வது அவனை வாழ்வின் அடுத்த கட்டத்திற்கு இட்டுச்செல்ல வழியமைப்பதாக அமைகின்றது. மாறாக அவன் உளப்பிரச்சினைகளை கவனமெடுக்காத சந்தர்ப்பத்தில் அவன் தன்னையே அழிப்பதற்கு வழியமைத்துக்கொடுப்பதாக அமைந்துவிடுகின்றது.

உளப்பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையக்கூடிய உளவளத்துணை பற்றி ரிட்லி ஜயசிங்க அவர்கள் குறிப்பிடும் போது உளவளத்துணை என்பது பிரச்சினைக்குட்பட்ட ஒரு ஆளுக்கு அவனிடமே மறைந்திருக்கும் வளமான திறன்கள், பலம் ஆகியவற்றை வெளிக்கொணர்வதன் மூலம் அவருக்கு அந்த பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்கு வழியமைத்துக் கொடுக்கும் ஒரு பொறிமுறையாக அடையாளம் காணலாம். இந்த கருத்துப்படி எல்லா ஆடகளுக்குள்ளும் ஏதாவது ஒரு மறைந்த திறமைகளும், நிபுணத்துவமும் இருப்பதாகவும் அவைகளை வெளிக்கொணர்வதன் மூலம் அந்த பிரச்சிகைளுக்குத் தீர்வு பெற்றுக்கொள்வதற்கு முடியும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது (நௌபர், 2010).

மேலும் உளவளத்துணை தொடர்பாக ஆர்.எல். பெரேரா அவர்கள் குறிப்பிடும் போது 'உளவளத்துணை என்பது ஒரு மனிதன் தனது சாதாரண வாழ்க்கையில் ஈடுபடுகின்ற போது அவன் எதிர்பார்த்தோ, எதிர்பாராமலோ பல்வேறான பிரச்சினைகளுக்கும், சிக்கல்களுக்கும், இடையூறுகளுக்கும் உள்ளாகின்றான். அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிலவற்றில் தன்னம்பிக்கையோடு முகங்கொடுக்கின்றான். சிலவற்றில் அவற்றை தீர்கக முடியாமல் பல்வேறான நெருக்கீடுகளுக்கும், மனத்தாக்கங்களுக்கும் உட்பட்டு தமது வாழ்க்கையை சிறப்பாக முன்னெடுத்து செல்ல முடியாமல் அவதிப்படுகின்றான். இவ்வாறாக அவன் பிரச்சினைகளுக்கு உட்படும் போது அவனது உணர்ச்சிகள் மேலோங்குவதோடு அவனது அறிவுசார் நடவடிக்கைகளும் ஒடுக்கப்படுகின்றன. எனவே தான் உளவளத்துணை செயற்பாடானது அவனது அறிவை தட்டியெழுப்புகின்ற நடவடிக்கையினை மேற்கொள்கின்றது. இவ்வாறான உளவளத்துணை செயற்பாட்டின் போது மனிதன் தன்னை நேர்மனப்பான்மையோடு நோக்கவும். தன் பிரச்சினையை தெளிவாக உணரவும், தனது பிரச்சினையை வெற்றிகரமாகத் தீர்ப்பதற்கும், வாழ்வை சந்தோசமாக எதிர்கொள்வதற்கும் தேவையான சக்தியினையும், திறமையினையும் தன்னுள் வளர்த்துக் கொள்ளவும் முடிகின்றது' (கனேசராஜா, 2017).

அமெரிக்க உளநலச் சங்கம் உளவளத்துணை என்பதை ஒருவர் தனது உளவளங்களின் முழுமையான விருத்தியை நோக்கிச் செல்கின்ற பயணத்தில் அவர் சந்திக்கின்ற தடைகளை வெற்றிகொள்ள அவருக்கு அளிக்கும் ஒரு தொடர் செயற்பாட்டு உதவியேயாகும் (அஸ்ஹர், 2010).

### இஸ்லாமிய உளவளத்துணை

உளவளத்துணை செயன்முறையின் போது இஸ்லாமிய போதனைகளை முன்னிறுத்தி உளப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைப்பதாக இஸ்லாமிய உளவளத்துணை காணப்படுகின்றது. இஸ்லாமானது முஸ்லிம்களுக்கு நடத்தைச் சட்டங்களையும் மற்றும் சமூக விழுமியங்களையும் கற்றுக்கொடுக்கின்றது. இதனால் பொறுமையினையும், நெருக்கீடான வாழ்க்கை நிகழ்வுகளில் ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிக்கவும் தேவையான நுட்பங்களை விருத்தி செய்யவும் இது உதவுகின்றது. மேலும் பிறரோடு எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் கற்றுக்கொடுக்கின்றது. இது பற்றி அல்குர்ஆன் ஸூரத்துல் பகறா 77ம் வசனம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. '...... மேலும் அல்லாஹ் உனக்கு நல்லதை செய்திருப்பது போன்று நீயும் நல்லதைச் செய். இன்னும் பூமியில் குழப்பம் செய்ய விரும்பாதே. நிச்சயமாக அல்லாஹ்

*குழப்பம் செய்பவர்களை நேசிப்பதில்லை'. இஸ்லாத்தில் ஸரீஆ எனும் வாழ்க்கை நெறிமுறை காணப்படுகின்றது. இது முஸ்லிம்கள் தங்கள் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய விடயங்களை வலியுறுத்துகின்றது. இது இரண்டு வகையான விடயங்களை கொண்டுள்ளது. இதில் முதலாவது மனிதன் இறைவனுக்கு செய்ய வேண்டியவை அடுத்தது மனிதன் மனிதனுக்கு செய்ய வேண்டியவை ஆகும். இந்த ஸரீஆவின் மூலாதாரங்களாக குர்ஆனும் ஹதீஸும் விளங்குகின்றன. அல்குர்ஆன் இறைவனை மாத்திரமே வணங்க வேண்டும் என்கிறது. அல்ஹதீஸ் முஹம்மது (ஸல்) அவர்களது வழிகாட்டல்களையும், செயல்முறைகளையும், ஆலோசனைகளையும், வாழ்க்கை வழிமுறைகளையும் கொண்டதாக காணப்படுகின்றது. இவற்றை பின்பற்றுவது ஒவ்வொரு முஸ்லிமின் கடமையாகும் (முஹம்மட் இயாஸ், 2017).*

*அல்குர்ஆனும், அல்ஹதீஸும் மனித வாழ்வின் வெற்றிக்கான அனைத்துவிதமான வழிகாட்டல்களையும் வழங்கியிருக்கின்றது. ஒரு மனிதன் மகிழ்வாக இருக்கும் போதும், கவலையாக, மனச்சோர்வாக இருக்கும் போதும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதையும் இஸ்லாம் சொல்லியிருக்கின்றது. இந்தவகையில் உளப்பிரச்சினைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதை ஸூரத்துல் இன்ஸிராஹ் 5 – 8ம் வசனங்கள் பின்வருமாறு கூறுகின்றன. 'நிச்சயமாக துன்பத்துடன் இன்பம் இருக்கின்றது, நிச்சயமாக துன்பத்துடன் தான் இலகு இருக்கின்றது, எனவே, வேலைகளிலிருந்து நீர் ஓய்ந்ததும் இறைவழியிலும், வணக்கத்திலும் முயல்வீராக, மேலும் முழு மனதுடன் உமது இறைவன் பால் சார்ந்துவிடுவீராக.'*

*மனிதனுக்கு ஏற்படக்கூடிய அனைத்துப் பிரச்சினைகளுக்கும் இஸ்லாமிய மார்க்கத்தில் தீர்வுள்ளது. இந்தவகையில் உளப்பிரச்சினைகள் ஏற்படும் போது அத்துறைசார் இஸ்லாமிய உளச் சிகிச்சையாளர்களை இனங்கண்டு அதற்கான சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் (முஹம்மட் இயாஸ், 2017).*

*இது பல்வேறு துறைகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்காக உளவளத்துணை கோட்பாடுகளும், சிகிச்சை முறைகளும், சிகிச்சை நுட்பங்களும், திறன்களும் பயன்படுத்தப்படுகிறன. உதாரணமாக, முன்மாதிரி காட்டல் (*Modeling*), கனவுப்பகுப்பாய்வு (*Dream Interpretation*), உளக் கற்கை வழங்குதல் (*Psycho Education*), வலுவூட்டல் (*Reinforcement*), சமூகத்திறன் விருத்தி (*Social Skills Training*), சுய வெளிப்படுத்தல் (*Self Discloser*), விளையாட்டு முறைச்சிகிச்சை (*Play Therapy*), வெறுப்பூட்டும் சிகிச்சை (*Aversion Therapy*), சுய மேலாண்மை (*Self-Management*), சாந்தப்படுத்தல் (*Relaxation*) போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவை அனைத்துமே மனிதர்களில் ஏற்படும் உளப்பிரச்சினைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட முறையில் சிகிச்சை வழங்குவதற்கு துணைபுரிகின்றன. இவற்றின் அடிப்படைகளை பல வருடங்களுக்கு முன்பே இஸ்லாமிய வழிகாட்டல்களில் பிரயோகிக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம் (பாத்திமா ஷீபா மற்றும் பஸ்லான், 2021).*

*ஆகவே, உளப்பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக்கொடுப்பதில் உளவளத்துணை பங்களிப்பு செய்வது போன்று இஸ்லாமிய உளவளத்துணையானது மார்க்கத்தின் போதனைகளை முன்னிறுத்தி சிகிச்சையளிக்கின்றது.*

**ஆய்வுப் பிரச்சினை**

*உளநெருக்கடிகளை, உளப்பிரச்சினைகளை எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்களில் அவற்றுக்கான சிறந்த தீர்வினை பெற்றுக்;கொள்ள இஸ்லாமிய உளவளத்துணையை நாடிச்செல்வதில் காணப்படும் இடைவெளியை கண்டறிதல்.*

**ஆய்வின் நோக்கம்**

*உளவளத்துணை மற்றும் இஸ்லாமிய உளவளத்துணை பற்றிய தெளிவை மதிப்பிடுதல்*

**ஆய்வு முறையியல்**

*இவ்வாய்வானது தரம்சார், பண்புசார் முறையில் விபரிப்பு ஆய்வு முறையியலில் அமைந்துள்ளது. முதற்நிலைத் தரவுகள் கலந்துரையாடல் மற்றும் வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்டன. வினாக்கொத்து 150 பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்பட்டு தகவல்கள் பெறப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகள் ஆய்வுகள், நூல்கள், கட்டுரைகள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் எம்.எஸ். எக்ஸல் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.*

**ஆய்வின் முக்கியத்துவம்**

*இன்றைய காலகட்டத்தில் அதிகரித்துவிட்ட தொழில்நுட்ப வளர்ச்சியின்; காரணமாகவும், இயற்கை அனர்த்தங்களினாலும் முஸ்லிம்கள் உளப்பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இவர்கள் தங்கள் உளப்பிரச்சினைகளுக்கு சிகிச்சை பெற்றுக்கொள்ள இஸ்லாமிய உளவளத்துணையை நாடிச்செல்வது அரிதாக காணப்படுகின்றது. இந்தவகையில் இவ்வாய்வானது முஸ்லிம்களிடத்தில் குறிப்பாக பல்கலைக்கழக முஸ்லிம் ஆண் மாணவர்களிடத்தில் இஸ்லாமிய உளவளத்துணை பற்றிய தெளிவை மதிப்பிட முனைவதுடன், அதனை பெற்றுக்கொள்ள வழிகாட்டல் வழங்குகின்றது என்றவகையில் முக்கியத்துவம் பெறுகின்றது.*

**முன்னைய ஆய்வுகள்**

*பாத்திமா ஷீபா, எம்.ஐ. மற்றும் பஸ்லான், எம்.ஏ.சீ.ஏ. (2021). எட்டாவது இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபுமொழிப் பீட சர்வதேச ஆய்வு மாநாட்டிற்கு 'இஸ்லாமிய வழிகாட்டல்களில் பிரயோகிக்கப்பட்டிருக்கும் உளவளத்துணைச் சிகிச்சைமுறைகள்.' ஓர் விபரண ஆய்வு' எனும் தலைப்பில் சமர்ப்பித்த ஆய்வானது உளவளத்துணையாளர்கள் இஸ்லாமிய வழிகாட்டல்களை அறிந்திருப்பதை வலியுறுத்துவதாக அமைகின்றது. உளவளத்துணைச் சேவையினை நாடி வரக்கூடிய முஸ்லிம் சேவைநாடிகளுக்கு இஸ்லாமிய வழிகாட்டல்கள், வரைமுறைகள் உள்ளடங்கலாக சேவை வழங்கப்படாது வெறுமனே பாரம்பரிய உளவளத்துணையின் அடிப்படையில் வழங்கும் போது இஸ்லாமிய நம்பிக்கைகள், பெறுமானங்கள், கலாசார விழுமியங்களுக்கு அப்பாற் சென்றுவிடுவதற்கான வாய்ப்புக்கள் எழுகின்றன. இதிலிருந்து பாதுகாப்புப் பெற்று ஆத்மீக வரையறைகளை மீறா வண்ணம் உளவளத்துணையினை மேற்கொள்ள வேண்டுமாயின் முஸ்லிம் உளவளத்துணையாளர்களுக்கு மத்தியில் இஸ்லாமிய வழிகாட்டல்களில் பயன்படுத்தப்பட்டிருக்கும் உளவளத்துணைச் சிகிச்சை முறைகள் பற்றிய தெளிவு அவசியம் எனும் ஆய்வுப் பிரச்சினையினூடாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இவ்வாய்வானது உளவளத்துணையின் போது பயன்படுத்தப்படும் அணுகுமுறைகளை இஸ்லாமிய கண்ணோட்டத்தில் முன்வைக்கின்றது.*

*பாத்திமா ஷீபா, எம்.ஐ. மற்றும் சப்ரின், எம்.எஸ்.எம். (2021). எட்டாவது இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபுமொழிப் பீட சர்வதேச ஆய்வு மாநாட்டிற்கு 'போதைப் பழக்கத்திற்குட்பட்டோருக்கு அதிலிருந்து விடுபடுவதற்கு உதவி செய்வதில் இஸ்லாமிய உளவளத்துணையின் பங்கு: ௨0 க கூஆம் ஆண்டு கல்முனை நீதவான் நீதிமன்ற சமுதாய சீர்திருத்த கட்டளையாளர்களை மையப்படுத்திய ஆய்வு' எனும் தலைப்பில் சமர்ப்பித்த ஆய்வானது போதைப் பொருள் பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சையளிக்கும் போதுள்ள நுட்பங்களைப் பற்றி ஆராய்கின்றது. அதாவது, இன்றைய உளவளத்துணையாளர்களுள் அநேகமானவர்கள் மேற்குலக ஐரோப்பிய, அமேரிக்க சிந்தனைகளால் தாக்கமுற்றவர்களாக காணப்படுவதனால் தங்களிடம் வரக் கூடிய போதைப் பழக்கத்திற்கு உட்பட்ட சேவைநாடிகள் விடயத்தில் மிகச் சரியான முறையில் தலையீட்டை செலுத்தத் தவறுகின்றனர். வெறுமனே மேற்கின் உளவளத்துணை முறைமை, நுட்பங்களைப் பயன்படுத்தி இவர்களுக்கு*


*உளவளத்துணை வழங்கும் போது குறித்த முஸ்லிம் சேவைநாடி தான் அல்லாஹ் தடுத்த பெரும் பாவம் ஒன்றைச் செய்த குற்ற உணர்வுடன் வந்திருப்பதை பற்றி சிந்திக்காது உதவி வழங்குகின்றனர். அதனால் சேவைநாடிகளின் உடலியல் தாக்கங்களுக்கு சரியாக சிகிச்சையளிக்க முடிந்தாலும் உளவியல் மற்றும் ஆத்மீக ரீதியில் அவர்களுக்கு பலன்குறைவாகவே உள்ளது. இன்னும் அந்தக் குற்ற உணர்வும், மீண்டும் போதைப் பழக்கத்திற்கு ஆளாகமாட்டார் என்ற உத்தரவாதமின்மையும் தொடர்ந்து பயணிக்கின்றது என்பதை மையமாக கொண்டு இவ்வாய்வின் கலந்துரையாடல் பகுதி அமைகின்றது.*

*முஹம்மட் இயாஸ், எல்.ரி. (2017), நான்காவது இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபுமொழிப் பீட சர்வதேச ஆய்வு மாநாட்டிற்கு 'இலங்கை முஸ்லிம்களின் உளப்பிரச்சினைகளைக் கையாள்வதில் இஸ்லாமிய உளவளத்துணையின் பங்கு' எனும் தலைப்பில் ஆய்வொன்றை சமர்ப்பித்து இருந்தார். இதில் இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் உளப்பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இந்தவகையில் உளப்பிரச்சினைகளை முகாமைத் திட்டமிடலில் எவ்வாறு ஆன்மீக நம்பிக்கைகள் தாக்கம் செலுத்துவது பற்றி இவ்வாய்வு ஆராய்கின்றது. இதனடியாக மார்க்க ரீதியில் உளப்பிரச்சினைகளுக்கு இஸ்லாம் கூறும் தீர்வுகளைப் பற்றியும் பேசுகின்றது.*

*கனேசராஜா, கே. (2017), ஏழாவது தென்கிழக்குப் பல்கலைக்கழக சர்வதேச ஆய்வு மாநாட்டிற்கு 'கல்வி உளவளத்துணையும் அதன் பிரயோக ரீதியான பிரச்சினைகளும்' எனும் தலைப்பில் ஆய்வொன்று சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வாய்வானது உளவளத்துணை பற்றியும், கல்வி உளவளத்துணை பற்றியும் ஆராய்கின்றது. இதில் உளவளத்துணை என்பதற்கு கொடுக்கப்படும் வரைவிலக்கணங்கள் மற்றும் விளக்கங்கள் தெளிவாக பேசப்பட்டுள்ளது. மேலும் கல்வி உளவளத்துணை பற்றிய அறிமுகமும் அதன் பிரிவுகள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.*


**கலந்துரையாடல்களும், பெறுபேறுகளும்**

*இவ்வாய்வானது இஸ்லாமிய உளவளத்துணையை நாடிச்செல்வதிலுள்ள இடைவெளியை கண்டறியும் முகமாக மேற்கொள்ளப்படுகின்றது. இந்;தவகையில், உயர்கல்வியில் கல்வி கற்கின்றவர்களிடத்தில் இவ்விடயத்தை அறிவது பற்றிய மதிப்பீட்டை அறிவதற்காக, ஆய்வு மாதிரியாக தெரிவு செய்யப்பட்டவர்களிடத்தில் 'பட்டதாரி மாணவர்களிடத்தில் இஸ்லாமிய உளவளத்துணை எண்ணக்கரு பற்றிய தெளிவு இருப்பது அவசியமாகும்' எனும் வினா கேட்கப்பட்டது. இவ்வினாவிற்கு 98 வீதமானவர் (147 பேர்) தங்களிடம் இஸ்லாமிய உளவளத்துணை பற்றிய தெளிவு முழுமையாக காணப்படுவதாக ஏற்றுக் கொள்கின்ற அதேவேளை 2 வீதமானவர்கள் (3 பேர்) தங்களிடம் அவ்விடயம் தொடர்பாக ஓரளவு தெளிவு காணப்படுவதாக கூறினர். இதனை வரைபு 1 விபரிக்கின்றது.*





*வரைபு 1 இஸ்லாமிய உளவளத்துணை பற்றிய அறிவு அவசியம்*

*இதனைத் தொடர்ந்து, 'உளப்பிரச்சினைகளுக்கு இஸ்லாமிய உளவளத்துணை பெறச் செல்வது சிறந்ததொரு தீர்வாக அமைகின்றது' எனும் வினாவிற்கு 97 வீதமானவர்கள் (146 பேர்) முழுமையாக ஏற்றுக்கொள்வதாக பதிலளித்தனர். மீதமுள்ள 3 வீதமானவர்கள் (4 பேர்) ஓரளவு ஏற்றுக் கொள்வதாக பதிலளித்தனர். இந்தவகையில், உளவளத்துணையானது மனிதர்களுக்கு ஏற்படக்கூடிய உளப்பிரச்சினைகளுக்கு தீர்வாக அமைவதாக கருதுகின்றனர். இதனை வரைபு 2 தெளிவுபடுத்துகின்றது.*




*வரைபு 2 இஸ்லாமிய உளவளத்துணை பெறச் செல்லல்*

*வரைபு 1 இன் படி இஸ்லாமிய உளவளத்துணை பற்றிய தெளிவு அவசியம் என கூஅ வீதமானவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். வரைபு 2 இன் படி உளப்பிரச்சினைகளுக்கு தீர்வாக இஸ்லாமிய உளவளத்துணையை நாடிச் செல்வது காணப்படுகின்றது. எனினும், நடைமுறையில் அவர்களிடத்தில் இஸ்லாமிய உளவளத்துணை பற்றிய அறிமுகம் காணப்படுகின்றதா? என்பதை வினவிய போது, அவர்களுள் 53 வீதமானவர்களுக்கே இவ்விடயம் பற்றிய அறிமுகம் காணப்படுவதாகவும், 47 வீதமானவர்களுக்கு இவ்விடயம் பற்றிய அறிமுகம் இல்லை என்றும் கூறியிருந்தனர். இதனை வரைபு 3 தெளிவுபடுத்துகின்றது.*




*வரைபு 3 இஸ்லாமிய உளவளத்துணை பற்றிய அறிமுகம்*

*ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் முஸ்லிம் ஆண்கள் என்பதால் அவர்கள் இஸ்லாமிய உளவளத்துணை என்பதை மார்க்க உபதேசங்களை செவிமடுப்பது என எண்ணிக் கொண்டதாக அவர்களுடனான கலந்துரையாடலின் போது தெரிவித்தனர். பிரச்சினைகள் ஏற்படும் போது அவற்றுக்கான தீர்வினை இஸ்லாமிய உபதேசங்களின் மூலம் பெற்றுக் கொண்டு அவற்றிற்கு ஏற்றாற்போல் செயற்படுவதாகும் என்ற நிலையில் இருப்பதாக தெரிவித்தனர். இதனடிப்படையிலேயே வரைபு 1 மற்றும் வரைபு 2 இன் பெறுபேறுகள் உயர்ந்த அளவில் நேர்சிந்தனையில் காணப்பட்டதை அவதானிக்க முடிகின்றது. எனினும் வரைபு 3 இல் வினவப்பட்ட வினாவானது இஸ்லாமிய உளவளத்துணையில் அவர்களிடம் காணப்படுகின்ற அறிவினை மட்டிடுவதாக அமைகின்றது. இதன்போது, அவர்களில் அரைப்பகுதியினருக்கு இவ்வெண்ணக்கரு தொடர்பான முழுமையாக அறிமுகம் இன்மையை அடையாளப்படுத்த முடிகின்றது.*

*இந்தவகையில், இஸ்லாமிய உளவளத்துணை பற்றிய தெளிவு அவசியம் என உணரப்பட்டாலும் அவ்விடயம் தொடர்பான அறிமுகம் இல்லை என பதிலளித்தவர்களிடம் அதற்கான காரணங்கள் பற்றி வினவிய போது பின்வரும் விடயங்கள் அடையாளப்படுத்தப்பட்டன.*

***தெளிவின்மை:***

*பொது உளவளத்துணை மற்றும் இஸ்லாமிய உளவளத்துணை இரண்டிற்கும் இடையில் காணப்படும் வேறுபாடுகளை பிரித்து அறிந்து கொள்ள முடியாமை. அதாவது, பொது உளவளத்துணையில் பின்பற்றப்படும் படிமுறைகள், விளக்கங்கள் அனைத்துமே இஸ்லாமிய உளவளத்துணையிலும் காணப்படும் என்கிற மனோபாவம்.*

***எழுத்தாக்கங்களின் வெளியீடு குறைவு:***

*இஸ்லாமிய உளவளத்துணை பற்றிய ஆய்வுகள், ஆக்கங்கள், கலந்துரையாடல்கள் போன்றன போதியளவில் காணப்படாமையால் இவ்விடயம் தொடர்பான சரியான புரிதலை மேற்கொள்ள முடியாமல் போவதாகவும் கருத்து தெரிவித்தனர்.*

***மார்க்கத்தை பின்பற்றுவதிலுள்ள கவனயீனம்:***


*இஸ்லாமிய மார்க்க மனித வாழ்க்கைக்கான அனைத்துவித வழிகாட்டல்களை வழங்கியிருந்தாலும் அவற்றை தேவைக்கேற்ப சிதைவுறாமல் எடுத்து நடப்பதிலுள்ள கவனயீனமும் இதற்கு பிரதான காரணியாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் தெரிவித்தனர்.*

***இஸ்லாமிய உளவளத்துணையாளரின் செயற்பாடு:***

*முஸ்லிம் உளவளத்துணையாளர்கள் இஸ்லாமிய உளவளத்துணை பற்றிய கரிசனையோடு எடுத்து செயற்படுத்துவதை அவதானிக்க முடியாமை. ஆவர்ளும் பொது உளவளத்துணையை பின்பற்றுவதாக உளவளத்துணை சேவைநாடிகள் கருதுகின்றமையால் இவ்விடயம் தொடர்பான தெளிவை பெற முடியாமை.*

**குறைபாடாக கருதுதல்:**

*உளவளத்துணை பற்றிய அறிவைப் பெறுவதில் பின்நிற்பதற்கு பிரதான அம்சமாக உளவளத்துணை பெறச் செல்வதை குறைபாடாக கருதுகின்ற மனோநிலை காணப்படுவதை ஆய்வுக்குட்படுத்தியவர்களிடத்தில் அவதானிக்க முடிந்தது. இவர்களில் 60 வீதமானவர்கள் (90 பேர்) இவ்விடயத்தை ஏற்றுக்கொள்ளாவிடினும் 40 வீதமானர்களில் 7 வீதமானவர்கள் (10 பேர்) முழுமையாக ஏற்றுக்கொள்வதாகவும், 33 வீதமானவர்கள் (50 பேர்) ஓரளவு ஏற்றுக்கொள்வதாகலும் தெரிவித்தனர். இதனை வரைபு ச தெளிவுபடுத்துகின்றது.*





*வரைபு 4 உளவளத்துணை பெறுதல்*

*வரைபு ச இன் படி, உளவளத்துணை பெறச்செல்வதை குறைபாடாக கருதுகின்றவர்கள் ச0 வீதமாக காணப்படுவதால், அவர்கள் பொது உளவளத்துணை பற்றியோ, இஸ்லாமிய உளவளத்துணை பற்றியோ தெளிவைப் பெறுவதில் முனைப்பு காட்டாமல் இருப்பதாக தெரிவித்தனர்.*

*மேற்கூறப்பட்ட காரணங்களினால் இஸ்லாமிய உளவளத்துணை பற்றிய அறிமுகத்தைப் பெறுவதில் ஆய்வுக்குட்படுத்தப்பட்;டவர்கள் பெரிதளவில் கரிசனை கொள்ளாமல் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.*

*இவ்வாறு உளவளத்துணை பெறச்செல்வதை குறைபாடாக கருதியவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட உளப் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற இஸ்லாமிய உளவளத்துணையை நாடவில்லை என்பதை வரைபு 5 மூலம் அறியக் கிடைக்கின்றது. வரைபு 4 இல் கிடைக்கப்பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையிலேயே வரைபு ரு இற்கான பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றிருப்பதை அவதானிக்க முடிகின்றது. இந்தவகையில், உளப்பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற எத்தணிப்பதில் இஸ்லாமிய உளவளத்துணையின் பால் ஈர்ப்பு காட்டியவர்களாக 60 வீதமானவர்கள் அடையாளப்படுத்தப்பட்டனர். மேலும் வரைபு ரு இன் படி இஸ்லாமிய உளவளத்துணை பற்றிய அறிமுகம் 7 வீதமானவர்களுக்கு இல்லாவிடினும் அவர்கள் தங்களின் நண்பர்களின் வழிகாட்டலின் கீழ் இஸ்லாமிய உளவளத்துணையைப் பெற எத்தணிப்பு மேற்கொண்டமையை அறிய முடிகின்றது.*




வரைபு 5 இஸ்லாமிய உளவளத்துணை பெற எத்தணித்தல்

ஆகவே, உளப்பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வினைப் பெற இஸ்லாமிய உளவளத்துணை உதவியாக இருப்பினும், அதன்பால் செல்வதை குறைபாடாக கருதி தங்களுக்கு ஏற்படும் உளப்பிரச்சினைகளுக்கு தீர்வு தேடாமல் ஆய்வுகுட்படுத்தியவர்களில் 40 வீதமானவரகள் இருக்கின்றனர். இது தொடர்பான அவர்களது மனோநிலைகளைப் பற்றி அறிய முற்பட்ட போது பின்வரும் விடயங்களை அடையாளப்படுத்த முடிந்தது.

- இஸ்லாமிய மார்க்கத்தை பின்பற்றுவோர் என்றடிப்படையில் இஸ்லாமிய உளவளத்துணை பற்றிய அறிவை பெற்றிருப்பது அவசியமாக உணரப்பட்டாலும் அதனை தேடிப்பெற்றுக் கொள்வதற்கான ஆர்வம் குறைவாக உள்ளது. இதற்கு இஸ்லாமிய மார்க்கத்தின் மீதான சரியான புரிதல் இன்மையை காரணமாக கூறலாம்.
- இன்று அறிவைத்தேடுவதற்கான பல்வேறு ஊடகங்கள் இருந்தும் பெரும்பாலும் பயனற்ற விடயங்களின் பால் மனோஇச்சைகள் தூண்டுவதால், வீணானவற்றில் காலம் கடத்த வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகிவிட்டது.
- உடல் நோய்களுக்கு சிகிச்சை பெறுவது போன்று உள நோய்களுக்கும் சிகிச்சை பெற வேண்டும். ஆனால் சமூகம் உள நோய்களுக்கு சிகிச்சை பெற இஸ்லாமிய உளவளத்துணையை நாடிச்செல்வதை தாழ்வாக கருதுவதால், அதனை நாடிச்செல்வதில் மனக்கசப்புகள் ஏற்படுவதுடன், நண்பர் மத்தியில் இழிவான பார்வை ஏற்படுகின்றது.
- மனிதன் என்றவகையில் உளப்பிரச்சினைகள் ஏற்பது இயல்பு. குறிப்பாக தொழிற்சந்தையை எதிர்நோக்கும் பட்டதாரி மாணவர்களிடத்தில் எதிர்காலம் பற்றிய அச்சம் இருப்பது இயல்பானதாகும். இதனடியாக அவர்களுக்கு மனச்சோர்வு, கவலை ஏற்படுவது யதார்த்தமாகும். எனினும் இஸ்லாமிய உளவளத்துணையை நாடி முஸ்லிம் மாணவர்கள் அரிதிலும் அரிதான விடயமாகும். ஏனெனில் இவ்வாறு செல்வதன் மூலம் தங்கள் மதிப்பு, நற்பெயர் கெடும் என எண்ணுகின்றனர்.

**முடிவுரை**

*மேற்கூறப்பட்ட விடயங்களை நோக்கும் போது இஸ்லாமிய உளவளத்துணை பற்றிய அறிவை, தெளிவை பெற வேண்டுமென்பதை ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்கள் ஏற்றுக்கொண்டாலும், அதற்கான முயற்சிகளை மேற்கொள்வதை விட்டும் கவனயீனமாக இருக்கின்றனர். மேலும் முஸ்லிம்கள் என்றவகையில் இஸ்லாமிய உளவளத்துணை பெறச்செல்வதை உளப்பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வாக கருதினாலும், சமூகக் கட்டமைப்பிற்கு இசைவாக்கமடைந்து அதனை விட்டும் ஒதுங்கி விடுகின்றனர். எனினும் இஸ்லாமிய உளவளத்துணை பெறச்செல்ல வேண்டுமென்ற எண்ணம் அவர்களின் ஆழ்மனதில் இருப்பதை அவர்களுடனான உரையாடல்கள் மூலம் அறியமுடிகின்றது.*

**பரிந்துரைகள்**

- *இஸ்லாமிய உளவளத்துணை பற்றிய எண்ணக்கருவை பொதுமைப்படுத்துவதற்கான செயற்பாடுகளை இஸ்லாமிய புத்திஜீவிகள், கல்விமான்கள் மேற்கொள்ளல்.*
- *முஸ்லிம் உளவளத்துணை வழங்குநர்கள் இஸ்லாமிய உளவளத்துணை பற்றிய தெளிவினை வழங்கும் வகையில் நூற்கள், கட்டுரைகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் வழங்குதல்.*
- *உளவளத்துணை கற்கையை வழங்கும் நிறுவனங்களிடம் இஸ்லாமிய உளவளத்துணை எண்ணக்கருவை பாடப்பரப்பில் உள்வாங்குவதற்கான ஆலோசனைகளை முன்வைத்தல்.*
- *உடல் நோய்களுக்கு சிகிச்சை பெறுவது போல் உள நோய்களுக்கும் சிகிச்சை பெறுவதன் அவசியத்தை உணர்த்தும் வகையிலான சுவரொட்டிகள், ஊர்வலங்கள், துண்டுப்பிரசுரங்கள் போன்றவற்றை சமூக அமைப்புக்கள் செயற்படுத்த முன்வருதல்.*
- *இஸ்லாமிய தஃவா அமைப்புக்கள் இஸ்லாமிய உளவளத்துணை பற்றிய எண்ணக்கருவை வளர்ப்பதில் கரிசனை காட்டுதல்.*
- *பல்கலைக்கழக மட்டங்களில் இஸ்லாமிய உளவளத்துணை தொடர்பான கற்கைநெறிகளை ஆரம்பிப்பதற்கான முன்னேற்பாடுகளை துறைசார்ந்தவர்கள் முன்மொழிதல்.*
- *இஸ்லாமிய உளவளத்துணை பற்றி பேசுகின்ற அறபுமொழி, ஆங்கிலமொழி சார்ந்த நூற்களை மொழிபெயர்ப்பு செய்வதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.*

## References

Barnand, Antini Predrik. (1999). *Ulavazha Sihichchaium Ulavalaththunaium*. Vijaya Achchaham.

Fathima Sheefa, M.I. & Fazlan, M.A.C.A. (2021). Islamiya Vazhihaddalil Pirayohikkappaddirukkum Ulavalaththunai sihichchai muraihal: oor vifarana aaivu. *8th International Symposium*, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka. http://ir.lib.seu.ac.lk/handle/123456789/5694

Fathima Sheefa, M.I. & Safreen, M.S.M. (2021). Bothai Palakkaththitku Udpaddoruku athilirunthu vidupaduvathatku uthavi seivathil Islamiya Ulavalaththunaien Pangu: 2019 aam aandu Kalmunai Neethawaan Neethimanra Samoothaaya seerthiruththa kaddalaiyaalarhalai maiyappaduththiya aaivu. *8th International Symposium*, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka. http://ir.lib.seu.ac.lk/handle/123456789/5698

Ganesaraja, K. (2017). Kalvi Ulavalaththunaium athan Pirayoha reethiyaana Pirachchinaihalum. *7th International Symposium*, South Eastern University of Sri Lanka. http://ir.lib.seu.ac.lk/handle/123456789/3104

Jawfar, U.L.M. (2010). *Ulaviyal saar Ulavalaththunai Anuhumurai*. Colombo: Kumaran Book House.

Kunasekara, Upaali. (1997). *Manavelichchium Ulavalaththunaium*. Tarangi Printers.

Muhammed Iyas, L.T. (2017). Ilangai Muslimkalin Ulap Pirachchinaihalai Kaiyaalwathil Islamiya Ulavalaththunaien Pangu. *4th International Symposium*, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka. http://ir.lib.seu.ac.lk/handle/123456789/2793

*Tarjumatul Quran*. (2005). Sri Lanka: Jama'ath Ansaris Sunnathil Mohammadiyya of Sri Lanka